# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 23.09.2019**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 6431/D/2019 & SA 6432/D/2019**

திரு K. ராதாகிருஷ்ணன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

1. பொதுத் தகவல் அலுவலர்,
   பள்ளிக் கல்வி இயக்ககம்,
   சென்னை- 600 006.

2. பொதுத் தகவல் அலுவலர்,
   தொடக்கக் கல்வி இயக்ககம், -- பொது அதிகார அமைப்புகள்
   சென்னை- 600 006.

3. பொதுத் தகவல் அலுவலர்,
   மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்,
   சென்னை- 600 006.

****

**ஆணை**

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (23.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு K. ராதாகிருஷ்ணன் ஆஜரானார். பொது அதிகார அமைப்புகளின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் முனைவர் திரு த. இராஜேந்திரன், துணை இயக்குநர் (மின் ஆளுமை) (பொ), பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை, பொதுத் தகவல் அலுவலர் திரு K. குணசேகரன், தொடக்கக் கல்வி துணை இயக்குநர் (நிர்வாகம்), தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு பதிலாக ஒப்புதல் பெற்ற திரு க. செந்தில், கண்காணிப்பாளர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை ஆகியோர் இன்றைய தின விசாரணைக்கு ஆஜரானார்கள்.

2. மனுதாரர், தனது 16.04.2018 மற்றும் 20.04.2018 தேதிகளிட்ட பிரிவு 6(1)-ன் கீழான இரண்டு மனுக்கள் மற்றும் 22.05.2019 தேதியிட்ட பிரிவு 19(1)-ன் கீழான இரு வேறு

முதல் மேல்முறையீட்டு மனுக்களுக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் 04.07.2019 தேதியிட்ட இரு வேறு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அவை இரண்டும் ஒருசேர இவ்வாணையத்தால் இன்று (23.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

3. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 16.04.2018 தேதியிட்டு பள்ளிக் கல்வி இயக்ககப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் மற்றும் விதிகளின்படி தொடக்கக் கல்வி என்பது எந்த வயது (அ) வகுப்பு முதல் எந்த வயது (அ) வகுப்பு வரை குறிக்கிறது என்ற விவரம், LKG & UKG ஆகிய வகுப்புகள் தொடக்கக் கல்வி என்பதன் வரையறையின் கீழ் உள்ளதின் விவரம், மேற்படி சட்டத்தின் கீழ் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பள்ளிக்கு வகுப்பு வாரியாக நிர்ணயிக்கப்பட்ட கல்விகட்டணம், சீறுடை கட்டணம், நோட்டு புத்தகங்கள் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் போன்ற விவரம் ஆகியவற்றை மொத்தம் 12 இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார். மேலும், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 20.04.2018 தேதியிட்டு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், 10.04.2018 மற்றும் 15.05.2018 தேதிகளிட்ட காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதங்களின் நகல்களைத் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

4. தனக்கு தகவல் ஏதும் வழங்கப்படாத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் 22.05.2019 தேதியிட்ட இரண்டு முதல் மேல்முறையீட்டு மனுக்களை பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்கக முதல் மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு தாக்கல் செய்துள்ளார். அதன் பின்பும், தனக்கு தகவல் ஏதும் வழங்கப்படாத காரணத்தால் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான 04.07.2019 தேதியிட்ட தனது இரு வேறு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்து, தான் கோரிய தகவல்களை முழுமையாக பெற்றுத் தருமாறு கோரியுள்ளார். மனுதாரரின் இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களும் ஒருசேர இவ்வாணையத்தால் இன்று (23.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் மற்றும் விதிகளின்படி அரசு உதவிபெறும் மற்றும் அரசு உதவிபெறாத தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் சீருடைக்கான கட்டணம் வசூலிக்கப்படுவதாகத் தெரிவித்தார். மேலும், மேற்படிச் சட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகளில் இலவச சீருடை உள்ளடங்குமா என்றும் கேள்வி எழுப்பினார். இன்றைய விசாரணையில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககப் பொதுத் தகவல் அலுவலருக்கு பதிலாக ஆஜரானவர், வழக்கு எண். W.P. No. 10833 of 2018-ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 27.06.2018 தேதியிட்ட ஆணையின்படி, அரசு உதவிபெறும் மற்றும் அரசு உதவிபெறாத தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் மட்டும் (tuition fee only) தான் வழங்கப்படுகிறது என்று தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், வழக்கு எண். W.P. No. 10833 of 2018-ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 27.06.2018 தேதியிட்ட ஆணையின்படி வெளியிடப்பட்ட செயல்முறை ஆணையின் நகலை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 நாட்களுக்குள் மனுதாரருக்கு பதிவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககப் பொதுத் தகவல் அலுவலருக்கு

உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுக்களின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்.**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். SA 6431/D/2019 & SA 6432/D/2019**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

1. பொதுத் தகவல் அலுவலர்,
   பள்ளிக் கல்வி இயக்ககம்,
   சென்னை- 600 006.

2. பொதுத் தகவல் அலுவலர்,
   தொடக்கக் கல்வி இயக்ககம்,
   சென்னை- 600 006.

3. பொதுத் தகவல் அலுவலர்,
   மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்,
   சென்னை- 600 006.

**மனுதாரர்:-**

திரு K. ராதாகிருஷ்ணன்,
எண். 168/4, பம்மல் மெயின் ரோடு,
அடையார் பேக்கரி மாடியில்,
கிருஷ்ணா நகர், பம்மல், சென்னை - 600 075.

Copy to: வழக்கு எண்கள். SA 6431/D/2019 & SA 6432/D/2019 / Stock file

KVPS 24.09.2019